2013 ஏப்ரல் 30]

அவர்கள் கூட்டுறவு அமைப்புகளின்மூலம் நெசவாளர்களுக்குப் பல்வேறு திட்டங்களைக் கொடுத்தும்கூட, அந்தத் திட்டத்தைப் பெறுவதற்காக நெசவாளர்கள் வராத சூழ்நிலை இருக்கின்றது.

மாவட்ட ஆட்சித் தலைவர், துறை சார்ந்த அதிகாரிகளை அங்கே அழைத்து இங்கே ஏற்றுமதி சார்ந்த பூங்காக்கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்று கூறினாலும்கூட, யாருமே முன்வருவதில்லை. அந்தத் தொழில் முனைவோர் முன்வருகின்றபோது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு அந்த நெசவாளர்களுக்கு அங்கே ஏற்றுமதி சார்ந்த ஜவுளிப் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்கு, ஜவுளிப் பூங்கா அமைப்பதற்குத் தயாராக இருக்கின்றது. இந்த ஆண்டுகூட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஜவுளிப் பூங்கா அமைப்பதற்காக 36 கோடி ரூபாய்க்கு அனுமதி வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நெசவாளர்களிடம் பேசி தொழில் முனைவோரை அழைத்து வந்து அரசுக்கு தெரிவிக்கின்றபோது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆரணி பகுதியில் தொழில் பூங்கா அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என்ற உத்தரவாதத்தை இந்த நேரத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சார்பாக கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 360, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

360—

சுற்றுலாத் தலம்

***9921—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மருது சகோதரர்களின் சங்கரபதி கோட்டையைப் புதுப்பித்து அப்பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS

[2013 ஏப்ரல் 30

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளையனை வெளியேற்றினார் வீரமங்கை வேலுநாச்சியார். அம்மா! நீங்கள் கொள்ளையனை வெளியேற்றியதால் நான்கு வேலுநாச்சியார்களுக்குச் சமம். (மேசையைத் தட்டும் ஒலி) தங்களை வணங்கி பதில் அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், சாக்கோட்டை ஒன்றியத்திலுள்ள சங்கரபதி கோட்டை வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. வனத் துறையின் அனுமதி பெறப்பட்டு, இப்பகுதியில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியோடு மேற்கொள்ள தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களினுடைய பாதுகாவலராக விளங்கிக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். வீரமங்கை வேலுநாச்சியார் வாழ்ந்த வீரபூமியான சிவகங்கையிலுள்ள மருது சகோதரர்கள் வாழ்ந்த காரைக்குடியிலிருந்து தேவகோட்டை செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் சங்கரபதிக்காட்டில் சுமார் 50 ஏக்கர் பரப்பில் சுமார் 200 ஆண்டுகள் பழமையான கோட்டை உள்ளது. அந்தக் கோட்டையை மருது சகோதரர்கள் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடுவதற்காக போர்ப் பயிற்சிக் களமாக அமைத்திருக்கின்றார்கள். அடர்ந்த காட்டுப் பகுதி என்பதால் போர்ப் பயிற்சிக் களமாகவும், கொரில்லா தாக்குதல் நடத்தும் பயிற்சிக் கூடமாகவும், யானைப் படை, குதிரைப் படை பயிற்சிக் களமாகவும் மருது சகோதரர்கள் பயன்படுத்தி வந்துள்ளனர். யானை, குதிரைப் படைப் பயிற்சி வெளியே தெரியாமலிருக்க சுமார் 15 ஏக்கரில் ஒரு குளம் வெட்டப்பட்டுள்ளது. இக்கோட்டையின் வடிவமைப்பு மதுரை திருமலை நாயக்கர் மஹாலைப்போல அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள கட்டடம் மற்றும் தூண்கள், சுடாத செங்கற்கள், கருப்பட்டி, கடுக்காய் மற்றும்

2013 ஏப்ரல் 30]

முட்டையின் வெள்ளைக் கரு ஆகிய கலவையைப் பயன்படுத்திக் கட்டப்பட்டதாக உள்ளது. கட்டடம் கட்டப்பட்ட ஆண்டுக்கான கல்வெட்டு மற்றும் வரலாற்று ஆவணங்கள் சமூக விரோதிகளால் அழிக்கப்பட்டு சிதிலமடைந்துள்ளது. பலநூறு ஆண்டுகளாகியும் இக்கோட்டைச் சுவர் மற்றும் தூண்கள் இன்றும் அப்படியே உள்ளன. இந்தக் கோட்டையிலிருந்து காள்வார்கோயில் பகுதிக்கு ஒரு சுரங்கம் உள்ளதாகவும் மாவீரன் வீரபாண்டிய கட்டபொம்மன் தம்பி ஊமைத்துரையை வீரசின்னமருது அவர்கள் அழைத்துவந்து பாதுகாப்பாக வைத்திருந்ததாகவும் சொல்லப்படுகிறது. எனவே, வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த மருது சகோதரர்கள் போர்ப் பயிற்சிக் களமாக வைத்திருந்த இந்த சங்கரபதிக் கோட்டையை மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த சங்கரபதிக் கோட்டையைச் சீரமைத்து சுற்றுலாத் தலமாக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரபதிக் கோட்டை 17 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. மருது சகோதரர்களின் போர்ப் பயிற்சிக் களமாகவும் செயல்பட்டது. மேலும், இக்கோட்டையைச் சுற்றி பிள்ளையார்பட்டி, திருக்கோஷ்டியூர், குன்னக்குடி, நாட்டரசன்கோட்டை போன்ற இடங்களில் சுற்றுலாப் பயணிகளை வெகுவாகக் கவரும் வகையில் புகழ்வாய்ந்த கோயில்கள் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நிறைவேற்றிக் கொடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் சிவகங்கை மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.